# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# கேள்வி அறிவித்தல்

## பல்பொருள் விற்பனை நிலையமும் அதனோடு இணைந்த போட்டோ பிரதி சேவைகள், மற்றும் தனியான போட்டோ பிரதி சேவைகள் வழங்குதல்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வழாக மாணவர்களுக்கான பின்வரும் தனித்தனி சேவை நிலையங்களை நடாத்துவதற்கு தனிநபர்களிடமிருந்தோ அல்லது நிறுவனங்களிடமிருந்தோ இத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| நிலைய இலக்கம் | நிலையத்தின் பெயர் |
|---|---|
| **நிலையம் 1** | பல்பொருள் விற்பனை நிலையமும் அதனோடு இணைந்த போட்டோ பிரதி சேவைகள் நிலையம் |
| **நிலையம் 2** | போட்டோ பிரதி மற்றும் அதனோடு இணைந்த சேவைகள் நிலையம் - பிரதான நூலகம் |
| **நிலையம் 3** | போட்டோ பிரதி மற்றும் அதனோடு இணைந்த சேவைகள் நிலையம் - கலை கலாசார பீடம் |
| **நிலையம் 4** | போட்டோ பிரதி மற்றும் அதனோடு இணைந்த சேவைகள் நிலையம் - பொறியியல் பீடம் |

தெரிவு செய்யப்படுபவர் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களின் பல்பொருள் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், அவர்களின் தினசரி விரிவுரை குறிப்புக்கள், பல்கலைக்கழக நூலகத்திலுள்ள நிரந்தர உசாத்துணை நூல்கள் என்பவற்றை நிழற் பிரதி செய்வதற்கும் தயாராக இருத்தல் வேண்டும்.

இச்சேவையை பொறுப்பேற்பவர் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதுடன் குறித்த சேவை நிலையங்களின் மாதாந்த மின்சார பட்டியலுக்கான கொடுப்பனவையும் மாதவாடகையாக ரூபா 1000 யினையும் மாதாந்தம் செலுத்த வேண்டும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்பத்தை பல்கலைக்கழக **சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (பொது நிருவாகம்)** அவர்களிடமிருந்து **2017 மே 31ம் திகதி வரை காலை 10.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரை** பெற்றுக்கொள்ள முடியும். ஒன்றிற்கு மேற்பட்ட சேவை நிலையங்களை நடாத்த விரும்புபவர்கள் தனித்தனி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழக காசாளரிடம் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்பாக ரூபா 5,000.00ம், மீளளிப்பு செய்ய முடியாத விண்ணப்பக்கட்டணமாக ரூபா 250.00 ஐயும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்கள் பதிவாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா, ஒலுவில் என்ற முகவரிக்கு **09.06.2017ஆம் திகதி அன்று பி.ப. 03:00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் சேரக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவாளர் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திர பெட்டியினுள் இடப்படல் வேண்டும். மேற்படி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **நிலைய இலக்கம், நிலையத்தின் பெயர்** என்பன தெழிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும். (மேலதிக தகவல்களை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (பொது நிருவாகம்) அவர்களிடமிருந்து 067-2255177 என்ற தொலைபேசி இலக்கத்தினூடக அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்)

குறிப்பு: தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்